ரோபஸ்டு ரி. நெ. 819.

உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—திருக்குறள்.

தொகுதி ச. } பரீதாபி௵ சித்திரை௴ } பகுதி 1.

பொருளடக்கம்.

நன்றிகூறல்—பத்திராதிபர்	க
பழக்கத்தின் பயன்—ஷை	உ
பெண்கல்வி—வெ. நாராயணசாமிபிள்ளை	ச
புதுவருஷ வருகை—வெ. முத்துசாமியய்யர் B. A., L. T.,	சு
மாலினீமாதவம்—R. S. நாராயணசாமியய்யர் B. A., B. L.	கO
சிந்தாமணி சரித்திரம்—P. S. சுப்பிரமணியய்யர்	கஎ
முத்திராராக்ஷஸம்—R. சேதுநாராயணசர்மா B. A., B. L.	உக
மணி மந்திர ஔடதம்—பொ. மு. முத்தயபிள்ளை	உரு
சமாசாரக்கொத்து—பத்திராதிபர்	ருக

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்—புரொப்ரைட்டர்.

ம. கோபால கிருஷ்ணையர். }
மு. ரா. கந்தசாமிக் கவிராயர். } பத்திராதிபர்

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ இரண்டுதான்.

மாணாக்கர்கட்கு௵சந்தா ரூ 1. தபாற்கூலிவேறு. தனிப்பிரதி அணா 3.

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப் பெற்றது.

உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ச.	பரீதாபி ஹு சித்திரை மீ	பகுதி க.

நன்றி கூறல்.

எல்லாம் வல்ல இறைவன் திருவருளாலும், கற்றுத்தேர்ந்த பண்டிதமணிகளின விஷயதானக் கருணைமாட்சியாலும், செந்தமிழபிமானச செல்வத்திற் சிறந்த கனவான்களின் வள்ளன்மைச் சிறப்பாலும், கையொப்ப நேயர்களின் அபிமானத்தாலும் நமது வித்தியாபாநுவின் மூன்றும் தொகுதி முற்றுப்பெற்று நான்காந்தொகுதி தொடக்கமுற்றது. சென்ற ஆண்டுகளிற் போலவே இவ்வாண்டிலும் இன்னோர் கருணைத்துணையால் நமது பாநு இனிது நடைபெறுமென்ற நன்னம்பிக்கையே யெமமை யூக்குவிப்பதாகின்றது. ஆதலின் முன்னரியற்றிய இவர்களது பேருதவியை வாழ்த்திப் போற்றுவதுடன் இன்னுமிவ்வாறே இவர்கள் முன்னின்றுதவி முட்டின்றி நடைபெறச் செய்யும் வண்ணம் இவ்வனைவரையும் பிரார்த்திக்கின்றனம். நமது பத்திரிகை 'விவேகபாநு' என்னும் பெயரால் ஆதியில் தூத்துக்குடியில் ஒருவருடமும், பின்னர் மதுரையில் ஆறுவருடமும் நனகு நடைபெற்று, பின்பு 'வித்தியாபாநு' எனனும் பெயருடன் சென்ற மூன்றுவருடங்களும் நடைபெற்று இந்நான்காவது ஆண்டும் தொடக்கமுறுகின்றது. இங்ஙனம் தன் பாநு நன்கு நடைபெறுதற்குக் காரணம் இதற்கு உயிர்போன்றவர்களாகி விஷயதானஞ் செய்யும் வித்துவசிகாமணிகளும், உடல்போன்றவர்களாகி சந்தாப்பொருளுதவும கையொப்ப நேயர்களும் இதனிடத்து வைத்துள்ள அன்பின் பெருக்கேயாமென்பதை யாம் நன்கு தெரிந்துள்ளோம. ஒருருவுக்கு உயிரும் உடலும்போல இப்பாநுவுக்கு இவ்விருவகையாருமே பிரதான உபகாரிகளாவார்கள். இவர்கள் பொறுப்பிலேயே இப்பத்திரிகை நடைபெறுகின்றதாதலின இவர்கள் விஷயத்தில் மற்றுமொருமுறை நன்றி கூறுகின்றேம்.

இங்ஙனம்

பத்திராதிபர்.

பழக்கத்தின் பயன்.

ஆன்மாவானது எக்காலத்தும் தனித்து நிற்றலின்றி யாதானுமொன்றனோடு சேர்ந்துபழகி அதனதன் மயமாய் நிற்குந்தன்மையது. மலத்தோடுகூடி "யான் எனது" என்னும் அகங்கார மமகாரங்களையடைந்து பிறப்பிறப்புகளைக்கொண்டு, துன்பத்துக்காளாகியும் இவற்றையெல்லாம் விட்டுச் சிவத்தோடுகூடி யின்பத்துக்காளாகியும் இருத்தலே ஆன்மவியற்கையாம். இங்ஙனமன்றித் தான்மட்டும் தனித்திருத்தல் இல்லை. இவ்வாறு சத்தோடுகூடிய வழி சத்தாகியும் அசத்தோடுகூடிய வழி அசத்தாகியும் இருத்தலாற்றான் ஆன்மா சதசத்து என்னும் பெயர்த்தாயிருக்கின்றது. ஆதலின் உலகத்தில் மானிடஜன்மமெடுத்த ஒவ்வொருவரும் தத்தம் ஜாதி வயசு கல்வி அறிவு ஒழுக்கம் முதலியவற்றிற்கேற்ப ஒத்த குணங்களை யுடையாரோடு பழகுவதிலே விருப்பங்கொள்வர். இவ்வாறு பழகிவருங்கால் இப்பழக்கத்தின் தகுதிக்கேற்பவே அவரவர் குணஞ்செயல்களமைவனவாகும். நற்குணமுந்தீக்குணமும் நீரும் நெருப்பும்போல் ஒன்றையொன்று தாக்கி மேற்செல்வன வென்பது யாவருமறிவரன்றே. நீர்மிகுந்தால் நெருப்பை அவித்துவிடும். நெருப்பு மிகுந்தால் நீரைச் சுவற்றிவிடும். இது போலவே நமது பழக்கம் நன்மையாயின் நம்மிடமுள்ள தீமைகள் கெடும். தீமையாயின் நன்மைகள் கெடும். ஆகவே நாம் அடையும் நன்மை தீமைகளெல்லாம் நமது பழக்கத்தின் பயனாகவே ஏற்படுவனவாதல் விளக்கமாகின்றது.

இதனாற்றான் "நல்லிணக்கமல்லது அல்லற்படுத்தும்" "சேரிடமறிந்துசேர்" என்பனவாதிய பற்பல அருமைப் பழமொழிகளை நம் முதியோர் கூறியுள்ளார். "தக்கவின்ன தகாதன வின்னவென், றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள, மக்களும் விலங்கே" என்ற ஆன்றோர் வாக்கின்படி, நல்லவும் தீயவு நாடிச் செய்யும் அறிவு பெற்றாலன்றி நமக்கும் விலங்கிற்கும் பேதமில்லையாம். பூர்வ ஜன்ம வாசனையால் புண்ணிய பாவப்பகுத்தறிவு இய

ற்கையே அமையப் பெற்றாலும் அவ்வறிவு கெடாது நாடோறும் வளர்தற் பொருட்டுப் பெரியோர் பழக்கங் கொள்ளவேண்டுவதவசியம். பெரியோரென்பார் இயற்கை யறிவும் செயற்கை யறிவாகிய நூலுணர்ச்சியும் அறிந்தவாறொழுகும் நல்லொழுக்கங்களுமுடையரேயாவர். இத்தகைப் பெரியார் பழக்கம் கிடைக்கப் பெறுதல் ஒருவகைப் பெரும்பாக்கியமே யென்க. இதுபற்றியன்றே

"சமயம்வரி னிடித்துரைப்பார் தக்கவழி செலச்செய்வார்
இமையவர்தம் உலகுறவும் இருளுலகம் பகையுமாய்
அமையஅறி வுறுத்துவார் அந்தோ நூல் கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குக் காண்கிடைக்கும் அரிதரிது"

என்றார் பிறரும். நாம் மட்டும் பழக்கத்தின் பயனையறிந்து நற்பழக்கம் கொள்ளல் மட்டிலமையாது நமது சிறார்களின் பழக்கங்களையும் மிகவும் கவனித்து வரவேண்டும். சிறுபருவப்பழக்கம் சிலைமேலெழுத்துப்போல் மனத்திற் பதிந்து வேரூன்றுவதாகும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பது நாமறியாததன்றே. இளமைப் பருவந்தான் கல்வி கற்றற்குரியதெனக் கூறுவதும் நிலைத்து நிற்குந் தன்மை பற்றியன்றி வேறில்லை. நமது சிறார்கள் பழக்கங்களை யிப்பொழுது கவனியாது விட்டுவிடுவந்தால் பின்னர் நீக்குதலரிதாகும். "பேயோடு பழகுறினும் பிரிதலரிதரி தென்று, தூயோரும் புகல்வர்" என்றது பொய்யன்றே. நன்மை தீமைகளைப் பகுத்தறியும் மனத்திட்பம் வருமுன்பு பன்னாட் பழகிய தொன்றைப் பின்னர் விடுத்தல் சுலபமன்று. குப்பையிற் கிடந்த தானியங்களைக் காலாற் கிளறிக் கொத்தித்தின்று பழகிய கோழிகள் சிறிதும் கல் மண் கலப்பில்லாத பாறையினிடத்துள்ள தனித்தானியத்தைக் கண்டபோதும் காலால் கிளறிக் கிளறிக் கொத்தித்தின்னுதல் பிரத்தியட்சமன்றோ? இதனாற்றான் "பழக்கங் கொடியது பார் பாறையையுங் கோழி கிழிக்கும்" என்றார் முதியோர். யாதொரு நன்மையுமில்லை யென்பது மாத்திரமன்று, பலவகைக்கெடுதியும் தருவனவாகிய சில கெட்ட பழக்கங்களைச் சிறுவயதில் ஆராயாது செய்துவிட்டுப் பின்னர் அதன் கேட்டையறிந்து நீக்க முயன்றாலும் முடிகிறதில்லையே.

சாதாரணமாக பொடி புகையிலே சுருட்டு இவைகளைப் பழகுங் காலத்து விளையாட்டாகவே தொடங்குவதும்,பின்பு எவ்வளவு சிரமப்பட்டு முயன்று பார்த்தாலும் அவற்றை நீக்க முடியாமையும் நாம் யாவரும் தத்தம் அனுபவத்தால் அறிந்தனவே யாகும். இவற்றையெல்லாம் உணர்ந்து வைத்துத் தான் நம் முதியோர் சிறுவர்களைக் குரு குலவாசம் செய்வித்து வந்தனர். குருகுலவாசமென்பது கற்றற்குரிய பருவம் வந்தவுடன் நல்லாசிரியனிடத்தே ஒப்புவித்துக் கல்வி கற்பித்தலுடன் ஒழுக்க முறைகளையும் கற்பித்துப் பழக்கித் தரும்படி விட்டு விடுதல். பஞ்சதந்திரக் கதையைப் படித்த ஒவ்வொருவரும் இதனைப் பற்றிச் செவ்வையாயறிதல்கூடும். மஹாபாரதத்தில் இவ்விஷயம் மிக விரித்துக் கூறப்பட்டுள்ளது. மற்றும் பல புராண வாயிலாகவும் அறியலாம். தொடக்கத்தில் தான் நற்குருவையடுத்து நற்போதனை பெற்று நற்பழக்கங்கொண்டு நல்வழியில் நடக்கவேண்டும். இவ்வாறு பழகி மனததை நேர் வழியிற் செலுத்திவிட்டால் பின்னர் ஒரு போதும் வேறு வழியிற் திரும்பாது.இந்த நுட்பத்தைநம் முன்னோர்கள் மிக நன்றாயறிந்திருந்தார்களாதலின் குருகுல வாசம் செய்விப்பதை மிக்க சிரத்தையுடன் நடத்தி வந்திருக்கிறார்கள். இப்பூர்விக வழக்கம் இக்காலத்து அறவேயொழிந்தது. இக்காலத்துப் பிள்ளைகள் கற்குமுறையும் கற்பிக்கும் முறையும் பழகு முறையும் பழக்கு முறையும் மிகச் சீர்கெட்டுப்போயின. இக்கேட்டிற்குக் காரணம் பெற்றோர்களின் கவனக்குறைவே யன்றி வேறுண்டோ?

சில இடங்களிலே மாணாக்கர்களை உபாத்தியாயர் கண்டிப்பதைத்தெரிந்த தாய்மார் அவ்வுபாத்தியாயரிடம் வந்து பகைமை பாராட்டிச் சண்டை பிடித்தலையும், மாணாக்கர்கள் மனத்துக்குத் திருப்தியாக நடக்கும் உபாத்தியாயர்களையே தேடியமைத்தலையும், பிள்ளைகளின் இஷ்டப்படியே படிக்க முறை ஏற்படுத்தலையும், பிள்ளைகள் மனமுவப்ப நடக்கும் மூடப்பிள்ளைகளையே கூட்டி வைப்பதையும் நாம் நேரிற் காண்கின்றோம். மற்றுஞ் சிலரோ "அரிச்சுவடி படித்தற்கு அரைப்பணச் சம்பளத்தில் வாத்தியார் போதாதா" என்று கல்வியறிவற்ற சாதாரண உபாத்தியாயர்களை நியமிக்கின்றனர். இதனால் நேரிடத்தகுவனவாகிய நன்மை தீமைகளைக் கவனிக்கிறதில்லை. இஃதென்ன கொடுமை! இஃதென்ன மடமை !!

சைவசித்தாந்த சாத்திரப்படிப்பு மிக்காரும், சிவநேயத்தாற் சிறந்தாரும், சைவாசார சீலத்தில் வழுவாதவரும், சிவபூஜாதுரந்தரரும் ஆகிய ஒரு பிரபு தமது குமாரனுக்குக் கல்விகற்பிப்பதற்காக ஒருவரை மாத நிவேதனங்கொடுத்து அமைத்துள்ளார். அப்போதகரோ நாஸ்திகக் கோட்பாட்டினர் வயிற்றுப்பெருமான் பொருட்டு விபூதியணிந்துகொள்பவர். இவரிடம் கல்விகற்று இடைவிடாது பழகிவந்த பிரபு குமாரனே இப்போதே நாஸ்திகப் பற்றுடையான் போல விவகரிக்கின்றான், விபூதியை நெற்றியிற் பூசுவதால் நெற்றிப் பாகத்து ரத்தவோட்டம் குன்றுமே என்று கன்றுகின்றான். ஜாதிமுறைக்கும் குடும்பமுறைக்கும் ஏற்றனவாகிய நடையுடைபாவனைகளில் வெறுப்பும், நவீன நடையுடைபாவனைகளில் விருப்புங்கொள்கின்றான். இவற்றையெல்லாம் யாமும் எமது நண்பரொருவரும் நேரிற் கண்டு மனம் பொறாது வருந்தினோம்.

பால்யத்தில் ஏற்படும் பழக்கமே உலகவாழ்க்கை நலத்துக்கும் பின்னர் மோக்ஷ நரகங்கட்கும் ஏதுவாக நிற்றலால் நம்மவர்கள் யாவரும் தங்கள் தங்கள் மக்களைப் பழக்குமுறையிற் பெரிதும் கவனம் செலுத்தல் வேண்டும். இதனைக் கவனியாது எத்தனை பெரும் பொருளைத் தேடி வைப்பராயினும் அத்தனையும் பாழாகவே போகும்.

"நுண்மை யறனு மிகத்தெளிந்து நூலி னியல்பு முலகியல்பும்
வண்மை யுறத்தேற் றிடுமாற்றல் வல்லா ராகி வளர்சீலம்
திண்மை யறிவா யுளின்முதிர்ந்தோர் சேர நன்கு மதித்திடுக
எண்மை புரியா துயர்ந்திடுக இயம்பும் வழியே நின்றிடுக"

—விநாயகபுராணம்

"ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்—ஓரும்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சேர்ந்து" (நாலடி)

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

பெண்கல்வி.

உலகத்திலே ஆண்பாலார்போலப் பெண்பாலாருங் கல்விகற்றற்குரியார் என்பதை, ஆங்கில முதலிய அநேகபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு விளங்குவதும் நற்றமிழ் வேதமுமாகிய குறளிலே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் "விலங்கொடுமக்களனையரிலங்குநூல் கற்றாரோடேனையவர்" என்னுங் குறளிலே மக்கள் என்னும் பொதுப் பெயரால் பெண்பாலாரையுந் தழுவிக் கற்றற்குரியாரென்பதை விளக்குகின்றனர். நாலடியாரில், "குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்ச ளழகு மழகல்ல; நெஞ்சத்து, நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையால், கல்வி யழகேயழகு" எனக்கூறியபாவில், ஆண்பாலாருக்குக் குஞ்சியழகையும், பெண்பாலாருக்கு முன்றானையழகையும் மஞ்சளழகையுங்கூறி அவைகளையும் அழகல்லவென மறுத்துக் கல்வியழகை விசேடித்தார். இக்கவிபாலும் பெண்கள் கற்றற்குரியாரென வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது: அல்லதூஉம் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இராமாயணத்தில் "பெருந் தடங்கட் பிறைநுத லார்க்கெலாம், பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால், வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும், விருந்து மன்றி விளைவன யாவையே" என்றனர். இக்கவியாலும் கோசலநாட்டுப் பெண்களெல்லாம் நிரம்பக் கல்வி கற்றவர்களென்று காணப்படுகின்றனர். அல்லதூஉம் கல்விக்குத் தேவதையாகிய கலைமகளாரும் பெண்மணியாகவன்றோ திகழ்கின்றனர்? நீதிநூற்களை யெல்லாமியற்றிய கவியரசியாகிய ஔவையாரும் பெண்ணுவரன்றோ! தற்காலம் ஆங்கிலேய மடவார்களெல்லாம கல்விபயின்றவராய் மிக்க கௌரவமமைந்து ஆண்பாலாரும் மதிக்கும் வண்ணம் நிகழ்ந்துவருவது நாங்கண்டதன்றோ? இன்னும் பலமதத்து மடவார்களும் கல்விகற்றுள்ளதை யாங்

காண்கின்றோம். இஃதிங்ஙனமாக, வரனையே கடவுளாய் மதித்து அவன் கூறிய வழி நிற்றலே பதிவிரதா தருமமென்பார். அப்பதிவிரதா தர்மம் கல்வியறிவில்லாத வழியமைதல் அத்திபூத்தாற் போலுமருமையாம். கல்வியறிவுளராயிருப்பின் கணவன், மாமன், மாமி, நாத்தி முதலியோர்கட்கு எவ்வெவ் விதம் நடந்துகொள்ள வேண்டுமோ அவ்வவ் விதம் நடந்துகொண்டு இல்லறத்தை நடாத்திப் பதிவிரதா தன்மத்தை விளக்கிப் புகழும் புண்ணியமும் பூணுவர். அல்லதூஉம் தங்கணவனுல்வருவாய் எவ்வளவுள்ளனவோ அவ்வருவாய்க்கேற்பச் செலவுசெய்துகொண்டு தத்தங் கணவர்களைக்கடனுக் காளாம்படிவிடார்கள். அழகுடையான் பாலாவது பொருளுடையான்பாலாவது இரண்டும் ஒருங்கேயமையப் பெற்றவனிடத்தாவது காமங் காரணமாக மற்றியாரிடத்தாவது மயங்கார். கல்வியறிவில்லாதகாலத்திலேயே பழககக்காரணமாய் நன்னடையில் இருக்கின்றவர்கள் கல்வியறிவுளரா யிருக்குங்காலம் எவ்வளவறிவினராயிருப்ப ரென்பது தொள்ளகிடககின்றது. கல்வியறிவுடைய தற்காலத்திய மடவார்கள் மிக்க கௌரவத்தோடிருக்கின்றன ரென்பது பிரத்தியக்ஷம். நம் தென்னிந்தியாவானது க்ஷேமங்குறைந்திருப்பது பெண்களுக்குக் கல்வி கற்பிக்கப் படாமையாலேயே யென்பது அறிவாளிகளின் துணிபு. அல்லதூஉம் கல்வியறிவுடைய ஆடவர்தம தருமை தெரியாத மடவாருடன் கூடிக்குலாவுதலையே அருவருப்பர். அங்ஙனம் அருவருப்பு நேரிடும்போது அவர்கள் இல்லறம் எங்ஙனம் நிகழும்? அறிவுடைய சில ஆடவர்கள் கல்வியறி வில்லாத மடவாருடன் கூடிப்படுந்துன்பத்தை யாம்பார்க்கின்றோம்; எத்தன்மைத்தாகிய இடுககணேரினும் கல்வியறிவுடைய மடவாள் மனையாயமைந்திருப்பின் அவர்கள் துன்பங்களெல்லாம காற்றிற் பஞ்சென்கை சொல்லாமேயமையும்.

உச்சிமேற் புலவர் கொள் மகாவித்துவ சிரோமணியாகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரும், மாயூர: மாஜி முன்சீபும் ஆகிய வேதநாயகம்பிள்ளையவர்கள் தாமியற்றிய நீதிநூலில் பெண்கல்வி ஆவசியமென்று வெளிப்படுப்பார், "கல்வியே

பறவழி காட்டு மாண்மகன்: செல்வழி யறிந்திடான் வித்தை தேறுமுன்; அல்வளர் கூந்தலா ரரிய நூலின்றி; நல்வழியுணர்ந்தநி னடக்கற் பாலரோ" என்றும் "இக்கலை நகுமொழி யெழின்மி ஞரி ஞன், மக்கண்மிக கோரெனன் மடமை யாமிரண்; டக்கமு மொக்குமே யன்றி நல்லகண், எக்கண்மற் றெக்கணே யிழி வுடைக்கணே" எனவும் "முடவரே நடக்கினு மூங்கை பேசினும், திடமொடந் தகர் வழி தெரிந்து செல்லினும், மடமயி லனையர்நூல் வாசி யாரெனில், 'அடமினன் னெறிதெரிந் தமையற் பாலரோ" எனவும் கூறிவற்புறுத்தினர். இங்ஙனமாக: கண்டனூர் தனவைசியர் சபையின்கண் சென்ற மகரமதி 10வ யன்று நமது நண்பர் ஸ்ரீமத் மு. ராம. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் பெண்கல்வியைப் பற்றிப் பிரசங்கித்தார்களெனவும் அன்று அச்சபைக்கு அக்ராசனாதிபதியாயமைந்த பிர்ம ஸ்ரீ லால்குடி சுப்பிரமணிய சாஸ்திரியாரவர்கள் முடிவுரையில் பெண்கல்வி கூடாதெனச் சில லௌகிக சமாதானங் கூறிப் பெண்கள் கற்றால் கற்பிற்றவறிக் கெடுவார்களெனக் கூறியதாக மதுரை வித்தியாபாநுவிலும் இரங்கோன் பாண்டியனிலும் வரைந்திருக்கக் கண்ணுற்று வருந்தினோம். பெண்களுக்குக் கல்வியுள்ளபோது அறிவு விசேடிக்குமா? குறைந்து தீயவழியிற் செல்லுமா? நீதிநூற்களைக் கற்ற மடவார்களெல்லாம் வழுவின்றியேயிருக்கின்றனர். அங்ஙனம் கற்றமடவார்களில் யாராவது அருமையாய்த் தவறியிருப்பதாய்க் காணப்படின் அவை அங்கீகரித்தற் கமையுமா? இவர் கூற்றானது அமிழ்தமுண்டவன் இறப்பானென்பதுபோன்று பயனில் கூற்றாயிருந்த லுணர்க.

இங்ஙனம்

இரங்கோனில் வசிக்கும்

திருப்பாப்புரம்: வெ. நாராயணசாமிப்பிள்ளை.

உ

சிவமயம்.

புதுவருஷ வருகை.

மங்கல மாண்போ டிங்குறும் இவ்வாண்
டெங்கும்நல் லாண்டாய் இனிதின் இலங்குக:
சென்றநா ளோடெம் செயல்மொழி சிந்தையில்
நின்ற தீதெலாம் பொன்றுக: இன்றுடன்
என்றும் எம் அகத்துள் துன்றிநல் லுணர்வே
மின்ற ஒளிர்க: இம் மலர்தலை உலகில்
எங்கும் நல்லவை எழில்பெற் றோங்குக:
மங்குக அல்லவை பங்க முற்றே:
எத்திசை களும் 'அறி வின்மையாம் இருளை'
"வித்தியா பாநு" வெகுண்டே கடிக:
மல்குக நூல்நயம் மருவிய புலவோர்:
பல்குக இன்பம் பல்லுயிர் மாட்டும்:
நல்குக வான்மழை: நாளும் பைம்பயிர்
புல்குக செழித்தே பூதல மெங்கும்:
வாய்மையே ஓங்குக: மாய்கபொய்: எம்மிற்
சேய்மையே ஆகுக சிறுதொழில் எல்லாம்:
வறுமை யாண்டும் வறுமையே உறுக:
பொறுமை யாண்டும் பெருமையே பெறுக:
"அரசருங் குடிகளும் அம்ம! வேறலர்;
உரைசெயின் உயிர் உலாம் உடல்" எனற்கிணங்க
நந்தாப் புகழுறு நல்லோ னை
ஐந்தாம் ஜியார்ஜாம் அன்னை மேரியும்
பன்னரும் நலமுறப் பாரினை யாண்டு
துன்னரும் இன்பம் துய்க்க: இவ்வையகம
நன்கொடை யாளர் நனிமிக
வன்கலி தீர்ந்து வாழிவா ழியவே.

வே. முத்துஸாமி ஐயன் B. A., L. T.,

மாலினீ மாதவம்.

அத்தியாயம் 13.

அ ப ஹ ர ண ம் .

(Abduction.)

(3-வது தொகுதி 388-ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதனுடைய மன நிலைமைகள் ஜாக்ரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி (நித்திரை) என மூவகையாய்ப் பிரிக்கப்பட்டிருப்பதாய் மனநூலோர் (Psycologists) கூறுவார்கள். மனிதன் தன்நினைவுடன், உலகத்தின்கண் தோன்றும் பொருள்களை ஐம்புலன்களின் மூலமாய்ப் பகுத்தறியும் நிலைமையே ஜாக்ர (விழிப்பு) நிலைமையாகும். இந்நிலைமையில் மனிதனுக்குத் தன்னறிவும் (Subjective consciousness) வெளியறிவும் (Objective knowledge), அதை அநுபவ பூர்வ ஞானத்துடன் (Knowledge of past experiences) ஒத்துப் பார்த்துப் பகுத்தறியும் திறமையும் உண்டு. தன்னறிவும், வெளியறிவுமில்லாமல், மனமானது லயமடைந்து, கேவலம், ஜீவாதாரங்களான ஹிருதயம், சுவாஸாசயம் முதலான மர்மக்கருவிகள் மாத்திரம் வேலைசெய்துகொண்டிருக்கும் நிலைமையே ஸுஷுப்தி (தூக்க) நிலைமையாகும். இவ்விரு நிலைமைகளுக்கும் நடுநிலைமை யொன்றுண்டு. அதுதான், ஸ்வப்னம் (கனவு) எனப்படும். இந்நிலைமையில், மனிதன் வெளியறிவையும், மனதில் உதிக்கும் தோற்றங்களை யறியவும் பாவ்ய, அபாவ்யங்களைப் பகுத்தறியவும் சக்தியற்றவனுய், சுவல்பமான தன்னினைவுடன், மனதின்சேஷ்டைகளுக் குட்பட்டிருக்கின்றுன். இவ்வற்புத நிலைமையைப் பற்றி புத்திமான்கள் பலவாறு கூறுகின்றுர்கள்.

வஸந்தவிலாச பங்களாவில் தனது அறையில், மாதவன், சரீரக் களைப்பாலும் மனவேதனைகளாலும், அயர்ந்து நித்திரை செய்கின்றுன். ஆமாம்! நித்திரை செய்கின்றுன்! அதிகமாய் வேதனையடைந்தால், மறுபடி வேதனையடைய மார்க்கமில்லாமல், சரீரமும் மனமும் உணர்ச்சியே யற்ற நிலைமை யடைகின்றனவல்லவா? இச

நிலைமையில் மாதவன் மனம் கொந்தளித்துக்கொந்தளித்துத் தானே லயமடைந்திருக்கின்றது. பக்கத்திலிருந்த விளக்கொளியானது அவன் செம்மேனியில் ப்ரகாசிக்கின்றது. தாமரை மொட்டுகள் போல அவன் கண்கள் மூடியிருக்கின்றன. சிவந்த அதரங்களினிடையிலிருந்து ஓர் மந்தஹாஸ ரேகையானது பரகாசிக்கின்றது. ஆஹா! இவ்வளவு துன்பங்களுக்கும் மத்தியில் அவனுள்ளத்தில் என்ன ஸந்தோஷம குடிகொண்டிருக்கின்றது? அதுதான் கனவின் அதிசயம்! அஸமபந்தங்க (Incongruities) ளே கனவின குணங்களல்லவா?

இந்நிலைமையில் நமது பரதேசியார், ஓர் சிறு விளக்கைக் கையிலேந்திக்கொண்டு,மாதவன்முன் ப்ரத்யக்ஷமாய் "மாதவ! என்னப்பனே! எழுந்திரு," என்றழைக்க, மாதவன விழித்துப் பரதேசியை வந்தித்தான். அவன் சிறையிலிருப்பது அவனுக்கிதே ஞாபகமில்லை. பரதேசி எவ்வாறு உள்ளே புகுந்தார் என்பதையும் அவன் ஆலோசிக்கவில்லை. 'வா' என்று பரதேசி யழைக்க அவர் பின்னேடு யந்திரப் பாவைபோல் மாதவன் சலித்தான். கதவுகளெல்லாம் தனபடியே மந்திரபலந்தாற்போல படீர படீர் என்று தெறித்து அவர்களுக்கு வழிவிட்டன. சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்கள் அரண்மனையை விட்டு வெளியேறி, நடுக்காட்டிலிருந்தும், ஸமாதியண்டை வந்து சேர்ந்தார்கள், அதன்மேலுள்ள கோவிலுட் புகுந்து, ஆங்குள்ள பிம்பங்களை மாதவன் முறைமேய வந்திக்க, அப்பிம்பங்கள உயிர்கொண்டு, தம் தம் கைகளால் மாதவனை சிபஸை முறைமே தடவி, மாதவனை வாரியணை தது மடிமீது போட்டு, முத்தமிட்டு, "குழந்தாய்! கண்மணி!, நீ நீடூழிகாலம் வாழ்வாய்— உனக்கு ஒரு குறையும் வராது" என்று ஆசீர்வதித்தன.

இவ்வாறு மாதவன் கனவுகொண்டிருக்கும் நிலைமையில், தன் அறையின் பின்பக்கத்தில் "ஐயோ! ஐயோ!" என்று பெண்குரல், கேட்கவே, மாதவன் திடுக்கிட்டு விழித்தான். தன் கனவெல்லாம் மறந்து மறுபடி 'பாரா'களுக குட்பட்டு சிறையில் தான் சுவாதினமற்றவனாய இருக்கும் நிலைமையை யுணர்ந்தான். இதற்குள், "ஐயோ! ஐயோ." என்ற தீனமான குரல்கள் மறுபடி கேட்டன.

நிசிசேஷனை எங்கும் நிஸ்ஸப்தமாயிருந்ததால், இப் பெண்குரலானது அதிக தீர்க்கமாய் இவன் உள்ளத்தில் பாய்ந்தது. அது மாலினீ யின் குரல் என்று அறிந்துகொண்டான். ஐயோ! என்னசெய்வான்! என்ன ஆபத்துக்குட்பட்டிருக்கின்றளோ! எவ்வாறு அவளைக் காப் பது! ஒருவழியு மில்லையே! அங்குமிங்கும் பிசாசுப் பிடித்தவன் போல் ஓடினன். வெளியேற வழியில்லை யென்று, அவ்வ றையின் ஓர் கதவைத் தன் வீராவேசத்துடன் உதைக்க அது படீ ரென்று கீல்கள் துண்டித்து வீழ்ந்தது. அதன் வழியாய், மாடி க்கு ஏறினன். வெளிப்புறம் எட்டிப்பார்த்தான். மாலினீயின் அழுகைக் குரலும், "அடேடே! தூக்கடா சீக்கிரமடா! சீக்கிரமடா! தூக்கடா" என்ற ஆண்குரல்களும் கலந்து கலந்து கேட்டன. சுமார் நாலைந்துபேர்கள் எதிரில் இருப்பார்களென் றறிந்துகொண்டான் தான் இருக்குமிடம் தரையினின்றும் சுமார் 30 அடி உயரமிருக் கும். ஒன்றும் தோனறவில்லை. கடைசியாய் அம்மாடிமீது காட் டப்பட்டிருந்த 'கொடியின்' ஓர் கயிற்றை யறுத்து, ஆங்கோர் பலக ணிக் கம்பியில் ஓர் நுனியைக்கட்டி, அக் கயிற்றின் வழியாய் மட மடவென்று கீழே இறங்கித் தன் பகைவரின் மத்தியில்வந்து சேர்ந் தான். நிற்க,

இதற்குமுன் நடந்த விஷயங்களை ஸங்க்ஷேபமாய் நமது நண் பர்களுக்குத் தெரிவிப்பது அவசியமென்று நினைக்கின்றோம்: தன் தமையன் இறந்த துக்கம் தவிர, யாதொன்று மறியாத மாதவன் மீது ஏற்பட்டுள்ள அபவாதங்களையும் நினைத்து நினைத்து மாலினீ மனம் வருந்தலானள். "இவ்வளவு அன்புடன் வாழ்ந்துவந்த மாத வன் இக் கொடுஞ் செய்கையைச் செய்ய எவ்வாறு துணிந்திருப் பான்? ஒருவேளை கோபாவேசத்தால் தன் மதிகலங்கி இவ்வாறு செ ய்திருப்பானே? அன்று மாலையில், தன் பிரார்த்தனைப்படி, தனக் சபிமானமானவருக்குக் கெடுதிசெய்யச் சிறிதேனும் தான் துணிபவ னல்லன் என்று மாதவன் வாக்களிக்கவில்லையா? எப்படியானல் என்ன? சந்தர்ப்ப ஸாக்ஷ்யங்களெல்லாம ஒன்று சேர்ந்து பலமாக மாதவனுக்கு விரோதமாயிருக்கின்றனவே". என இவ்வாறு பலவா க சிந்தித்துக்கொண்டு, அன்றிரவு தன் அறையில் படுக்கைமேல் படுத்துக் கண்ணயர்ந்தாள். அந்நிசிவேளையில் அரண்மனைக்கு

வெளியே, திம்மனும் பொம்மனும், தைரியம், பலம், விசுவாஸம் முதலான குணங்களமைந்த தக்க ஆறுபேர்களுடன், அரண்மனையின் பக்கத்து வாசல்வந்து சேர்ந்தார்கள் அவ்வாசலின் முன் ஒரு திண்ணையில் காவற்காரன், உட்கார்ந்து சுவரில் சாய்ந்து, அப்படியே குறட்டை விட்டுக்கொண்டிருந்தான். திம்மன் அவனண்டை சென்று, "அண்ணே!" என்று எழுப்பக், காவற்காரன் திடுக்கிட்டெழுந்து 'யாரடா!' என்று கர்ஜிக்க ஆரம்பித்தான். இதற்குள், பொம்மன் தன் கத்தியை, காவற்காரன் நெஞ்சுக்கு நேராகப் பிடித்துக்கொண்டு, "அடே! சத்தம் போடாதே! இனி மூச்சுவிட்டாயோ—இந்தக் கத்தி உன் நெஞ்சிற் பாய்வது திண்ணம். உன் மூச்சும் கடைசி மூச்சுத்தான்." என்று பயமுறுத்த, காவற்காரன் நடுநடுங்கி "ஏனண்ணே!—என—னை—உன—க்கு—க்கோடி புண்ணிய முண்டு—நான் பிள்ளைகுட்டிக்காரன்—அண்ணே!—" என்று அழுதான்.

திம்மன்:—"சரி! அப்படியானால் இந்தக் கதவுத் திறவுகோலை என் கையில் கொடு".

காவற்காரன்:—"அண்ணே! கருப்பன் ஆணை சொல்லுதேன் அண்ணே! என்னண்டை கிடையாதண்ணே!"

பொம்மன்:—இந்த வாக்கிலே 'நச்சென்னுட்டு அடிச்சேனானால் என்னமாயிருக்கும் தெரியுமா?" என்று பயமுறுத்திக்கொண்டு தன் சிறு துணியால் காவற்காரன் வாயையும், கண்களையும் இறுகக் கட்டிவிட்டு, உடைப்பையில் கைபோட்டு, அங்கிருந்த திறவுகோலை யெடுத்தது மெதுவாய்க் கதவின் துவாரத்தில் செலுத்திச் சுழற்றவே தாள் தள்ளப்பட்டது. நிமிஷநேரத்தில் கதவும் திறந்தது. காவற்காரன் கூச்சல் போடாமலும், ஓடிப்போய்விடாமலும், பந்தோபஸ்து செய்யும்படிக்கு இருவர்களை யங்கே நிறுத்திவிட்டு, மற்ற நால்வரும் உள்ளே புகுந்தார்கள். சிறிது நேரத்துக்குள், அப்பாதகர்கள் முன் தார்சா வழியாய்ச்சென்று, மாலினியின் அறைக்கதவை மெதுவாய்த் திறந்து, அவ்வறைக்குட் புகுந்தார்கள்.

* மங்கிய ஒளியுடன் எரிந்துகொண்டிருந்த விளக்கானது, மாலினியின் அழகிய சரீரத்தைத் தெரிவித்தது. திம்மன் சாடை செய்

யாமல் மெதுவாய் அடிமேல் அடி வைத்து, மாலினியின் அருகிற் சென்று, செந்தாமரைபோன்ற அவ்வழகிய முகத்தைப் பார்த்துத் தன்னை அறியாமல், "அடேடே! நல்ல பொம்பிளையடா! கட்டிககிட்டாலும் இப்படியல்லோ கட்டிக்கிடணும்' என்று புலம்ப, அருகிலிருந்த பொம்மன் 'அண்ணேண்ணே! என்ன இப்படிச் சொல்லுதே! இதுதானா சமயம்!" என, திம்மன் தன் ஞாபகமடைந்து, தான்வந்த வேலையைப் பார்க்க ஆரம்பித்தான்.

உடனே திம்மன் தன் இடுப்பில் வைத்திருந்த ஓர் சிமிழைத் திறந்து, அதனின்றும் ஓர் வெண்மையான பொடியை யெடுத்துத் தன் இரு விரல்களாலும், பொடித்து மாலினியின் மூக்குமுன் பிடிக்க, மாலினி முன்னிலும் அதிகமாக அயர்ந்துபோனாள். உடனே அப்பாதகன் மாலினியைத் தூககித் தன் தோள்மீது சாத்திக்கொள்ள முன்னே இருவரும், பின்னே ஒருவனுமாக, அவ்வறையினின்றும் புறப்பட்டு, அரண்மனைக்கு வெளியே வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது வாயிற் காப்போனைப் பார்த்து 'அடே! நாஙகள் வந்து போனதைப்பற்றி யாரிடமாவது சொன்னியோ, நானே நிககி மறுபடி உன் பிள்ளேகுட்டியை நீ பாக்கமாட்டே. இந்தா திறவுகோல்! கதவை அடச்சுக்கோ, சும்மா குறட்டை விடு. விடிந்தா—எனக் கொன்னும் தெரியாது என்னுடு. உன்பாட்டிலே தப்பிக்கோ! தெரிஞ்சிச்சா!" என்று பயமுறுத்திவிட்டு, அங்கே தயாராயிருந்த ஓர் கட்டிலின்மீது மாலினியைப் படுக்கவைத்துத், தூக்க ஆரம்பிக்கவே, அவளுக்குத் திடீரென்று மூர்ச்சை தெளிந்து, தன் நிலைமை யறிந்து மேற்கூறியவாறு சத்தமிட்டாள்.

உடனே மாதவன் ப்ரத்யக்ஷமாய், அங்கே நின்றுகொண்டிருந்த காவற்காரனிடமிருந்து கத்தியைச் சரேலென்று பிடுங்கிககொண்டு, அக்கட்டிலைத் தூக்கிச் செல்லுபவரில் பின்புறத்துள்ள இருவரையும் இரண்டு அடி அடிக்க, "அப்பசசி!" என்று அலறிக்கொண்டு கீழே சாய்ந்தார்கள். கட்டிலும் கீழே சாயவே, மாலினியும் கீழே வீழ்ந்தாள்.

மாதவன் மாலினியைத் தூக்கித் தோள்மீது சாத்திக்கொண்டு, அரண்மனைவாசல் நோக்கிச் செல்லவே, அப்பாதகர்களில் மற்றநால் வரும் பின்தொடர்ந்தார்கள். மாதவன், வாசலண்டை மாலினியை இறக்கிவிட்டு, அவளுக்குமுன் தான் நின்று அவள் மீது யாதொரு அடியும் விழாது காத்துக்கொண்டு, எதிரிகளை ஒருவனாய் எதிர்க்க லானான். சிறிது நேரத்துக்குள் மாதவன் எதிரிகளுக்கு இரையாய் விடுவான்போலத் தோன்றினான். ஆனால், கடைசியாய் வீராவேசத்துடன் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து தன் கத்தியால் திம்மனை ஓங்கி யடிக்கவே, 'அடி ஆத்தே!' என்று அலறிக்கொண்டு, திம்மன் கீழே சாய்ந்தான்.

இவ்வபஜயத்தைக்கண்டு மற்றவர்களும் பயந்து திம்மனையும், மற்ற இருவரையும் தூக்கிக்கொண்டு, தங்கள் கோட்டையை நோக்கி ஓடினார்கள்.

இதற்குள் மாலினி, பயந்தெளிந்து, மாதவனை இறுகத்தழுவி, "மாதவ! என மாதவ! ஐயோ! உன்கதி இப்படி நேர்ந்ததா" என்றலற,

மாதவன்:—"அம்மணி! நானே கொலைசெய்தவன். என்முன் நிற்பதே தங்களைப்போன்றவர்களுக்கு மிக்க இழிவாகும். மேலும் தங்கள் தமயனையே——"

மாலினி:—(கண்ணீர் சொரிந்துகொண்டு) "நம்பேன்! மாதவ நம்பமாட்டேன். ஒருக்காலும் நீ செய்திருக்கமாட்டாய். இதெல்லாம ஏதோ மாயமாயிருக்கின்றது. ஐயோ! என்னன்பே! ஐயோ, கேவலம் என்னிமித்தமல்லோ இவ்வித ஆபத்துக்களெல்லாம்——. இவ்வற்ப உயிர்——"

மாதவன்:—(சோகத்துடன் கண்ணீர் பெருக்கிக்கொண்டு, மாலினியை மார்போடணைத்து, முகத்தோடு முகம்புதித்து) கண்மணி! எல்லாம் வல்ல ஈசன் திருவுள்ளப்படிதான் நடக்கும். நாம் என்ன செய்யலாம்——"

இவர்கள் இந்நிலைமையில் இருக்கையில், இங்கு நடந்த சத்தத்தால், அரண்மனையினின்றும், சில சேவகர்களும், மணிபுரம் ராஜாவும் விளக்குகள் ஸகிதம் வந்து சேர்ந்தார்கள். இவர்களைக் கண்டதும், ஜமீந்தாருக்குக் கோப மதிகரித்தது. கண்கள் சிவந்தன. மீசை படபடவென்று துடித்தது.

"அடே மாதவ! அடே வஞ்சக! உனக்கு நான் ஜாமீன்கொடுத்திருக்க என் அனுமதியன்னியில நீ எவ்வாறு வெளியேறினாய் உள்ளே போ! இல்லாவிட்டால் சற்றேனும தயை தாக்ஷிண்யமின்றி உன்னை விலங்கிடச சொல்லுவேன்," என்றுகர்ஜிக்க, மாதவன் தன் விதியை நொந்துகொண்டு, ஒன்றும பேசாமல் அரண்மனையில் புகுந்தான். மாலினியும் உட்புகுந்து தன் அறைபோய்ச் சேர்ந்தாள். வாசற் காப்போன், இக்கொடும் ஸம்பவங்களைக் கண்ணுறக் கண்டவனாயினும், ஜமீந்தாரிடம் ஒன்றும் சொல்லத் துணியாமல் நடுநடுங்கிக்கொண்டிருந்தான்.

ஜமீந்தார்:—(கோபாவேசத்துடன் காவற்காரனை நோக்கி) "நாயே! நீ இவ்வஞ்சகர்கள் இவ்வரண்மனை விட்டு வெளியே ஓடிப்போக உடந்தையாய் இருக்கின்றாயா! பார் உன்னைச் சொல்லுகிறேன், நாளைக் காலை" என்று கர்ஜித்துவிட்டு, தன் சேவகர்களில் இருவரைக்கொண்டு, அவனைப் பிடித்துப்போகும்படி ஆக்ஞாபித்துவிட்டு, மற்றவர்களுடன், மறுபடி அரண்மனைக்குட் புகுந்தார்.

(இன்னும் வரும்)

R. S. நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

சிந்தாமணி சரித்திரம்.

இந்நாவல் "விவேகபாநு" என்னும் மாதாந்தப் பத்திரிகையில் 1905௵ முதல் 1908௵ வரையில் அச்சிடப்பட்டு பிரசித்தமாகி வந்தது. அச்சரித்திரத்தில் எட்டு அத்தியாயங்கள் முடிந்திருக்கின்றன. அந்த எட்டாவது அத்தியாயமானது மேற்படி விவேகபாநுவின் 1908௵த்திய சஞ்சிகையில் 288-வது பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. பின்னர் சில அசௌகர்யங்களால் பிரசித்தப்படுத்தப்படாமல் நின்றுபோகும்படி நேர்ந்ததைப்பற்றி மிகவும் விசனிக்கிறேன். இடையில் பிரசித்தமில்லாமற் போனதால் சரித்திர வரலாறுகள் வெகுபேர்களுக்கு ஞாபகமில்லாமலிருக்குமாதலின் கதையின் தொடர்ச்சி தெரியும் வண்ணம் முன் சரித்திர வரலாற்றைச் சுருக்கமாக இங்கே கூறுகின்றேன். அதாவது:—

சிந்தாமணி என்பவள் மிகவுஞ் செல்வம் நிறைந்த குலத்திற் பிறந்தவள். அவளை மணஞ்செய்த நடராஜ செட்டியாரும் அளவிறந்த சம்பத்துடையவர். அவர் வியாபார நிமித்தமாக மலையாளத்திற்குப் போயிருந்த சமயத்தில் அங்கிருக்கும் ஒரு அசிமங்கை மாயத்திற்குட்பட்டுத் தம் நிலைமையை மறந்து அவ்விடத்திலேயே இருந்தனர். அவருடைய தகப்பனுக்கு இளையதாரமாக வந்த அவர் சிறியதாயார், அவர் இறந்துவிட்டதாக ஒரு பொய்யான பத்திரிகையைச் சிந்தாமணிக்குப்படித்துக் காண்பித்து, சகல சொத்துக்களையும் தன்னுடைய சொந்த குமாரனான கண்மணிசெட்டிக்காக அபகரித்துக்கொண்டு சிந்தாமணியையும் வீட்டைவிட்டு அப்புறப்படுத்திவிட்டாள். சிந்தாமணி தன் புருஷன் உயிருடனிருப்பதைத் தெரிந்துகொண்டு, அவரைக்கண்டு அவருடைய அன்பை யாசிக்கும்படியாக மலையாளத்திற்குப் போய் கிருஷ்ணையர் என்பவருடைய சகாயத்தை யடைந்து, தன் புருஷனைத் தேடிப்பார்த்ததில் அவர் தாம் நேசித்திருக்கும் அசிமங்கையுடன் பாண்டிதேசத்தின் ஒரு பிரதான நகரத்தில் நடக்கும் உத்ஸவ விமர்சைகளைப் பார்ப்பதற்காகப் போய்விட்டதாகத் தெரிந்துகொண்டு, கிருஷ்ணையருடன் அந்நகரத்துக்குப் போய், மனோன்மணி சத்திரமென்னும் வீதியில் இருந்

துகொண்டு தன் புருஷனிருக்கும் இடததையு மறிந்தாள். அப்பொழுது, தன் புருஷன் மிகுந்த வியாதியினல் வருந்துவதாகவும் அந்த அச்சிமனைக அவருடைய வியாதியை அதிகரிக்கச்செய்து அவருடைய சொத்துக்களேயும் அபகரித்துக்கொண்டு அவரை அங்கேயே அநாதரவாக விட்டுவிட்டுத் தன்னூருக்குப் போய்விட முயற்சிப்பதாகவும கோவிந்தைய ரென்னும் ஒரு கனவானுல் வெளியாயிற்று. பின்னர், அவளும் கிருஷ்ணையரும் கோவிந்தய்யரும் நடராஜ செட்டியாருடைய விடுதிக்குப் போய்ப்பார்த்ததில் அந்த அச்சிமனைக அவரைக் கூட்டிக்கொண்டு முதனுள் இராத்திரியே எங்கேயோ புறப்பட்டுப் போய்விட்டதாக அவர்களுக்குத் தெரியவந்தது. அந்த அசசிமனைகயும் நடராஜ செட்டியாரும் தவறுதலாக அங்கே வைத்துவிட்டுப்போன மூட்டையொன்று இருந்தது. அந்த மூட்டையிற் பல தஸ்தவேஜுகளும் சில லிகிதங்களும் அடங்கியிருந்தன. அவைகளே யெடுத்துக்கொண்டு சிந்தாமணியும் கிருஷ்ணையரும் மனோன்மணி சத்திரத்திற்கு வந்துவிட்டார்கள். கோவிந்தய்யர் அவருடைய கிருகத்துக்குப் போய்விட்டார். மனோன்மணி சத்திரம் வந்தவுடன் சிந்தாமணியும் கிருஷ்ணையரும் அந்த லிகிதங்களேப் படித்துப் பார்த்தார்கள். அவைகள் கண்மணிசெட்டியால் நடராஜசெட்டியாருக் கெழுதப்பட்ட லிகிதங்களாயிருந்தன. அவைகளில் சிந்தாமணி நடத்தைப்பிசகுள்ளவளாக வியபிசாரியாய் சீர்குலேந்து போனுளென்று பொய்யாக எழுதப்பட்டிருந்தது. அவைகளேப்படித்தவுடன சிந்தாமணி ஆறாத்துயரங்கொண்டு தன்னுடைய ஞாதிகள் செய்திருக்குங் கொடுமையை நினேத்து நினேந்து வருந்தப்பட்டுக்கொண் டிருந்தாள். இவ்வளவும், இன்னும் நேர்ந்த பல வரலாறுகளும் 8-வது அத்தியாய முடியப் பரவிநிற்கின்றன. இனி,

9-வது அத்தியாயம்.

பின்னர், கோவிந்தையரும் "மனோன்மணி சத்திர"த்திற்கு வந்துமூட்டையிலிருந்த பொருள்களின் வரலாறுகளேயும்,மூன்று பத்திரிகைகளேப் படித்தவுடன் சிந்தாமணி மதிமயங்கிப் பலவாறுவருந்துவதையும் அறிந்தார். பிறகு கோவிந்தய்யர் மனத்துள் "இஃதெ

ன்ன, யாம் எதிர்பாராத துன்பமா யிருக்கின்றதே! அப் பெண்மணி யின் முகத்தையும், ஆசாரம் முதலிய சீலத்தையும் சிறிது நோக்கில், புண்ணியமே அவளுருவாய் அமைந்திருப்பதோ வென ஐயமுறலாம். மிக்க மனவருத்தத்துடன் அண்ணனுக்குத் தம்பி யெழுதியிருக்கும் அப்பத்திரிகைகளில் வரையப்பட்டிருப்பனவெல்லாம் சுத்தக் கறப னைகளென் எவ்வாறு மொழியத்தகும்? ஒருவாறு அவைகள உண் மையுள்ளவைகளாயின் இப்பெண்ணுக்குச் சார்பாக நாம முயற்சிப் பதும் நமக்கு வசைபாக முடியாதா! இந்தக் கிருஷ்ணையர் மிகக நல்லவராகக் காணப்படுகின்றார். அவர் உரைக்கும் மொழிகளெல் லாம் அவருடைய கல்வித் திறமையையும், தருமம் நிறைந்த சிந்தை யையும் நன்கு விளக்குகின்றன. 'உங்களுக்கு உதவிபுரிகிறேறனெ ன்று வெளிப்படையாயும் பிரதிக்ஞை செய்தோமே இனி இச்சங்க டத்தினின்று விலகி விடுவோமென்று தலையைக் கழற்றிக்கொள்ள முயல்வது உசிதமா? மனுஷிய குணத்தை என்னென்று திண்ண மாகப் பேல முடியும்? அதிலும், பெண்பாலருடைய மனோவிருத் தியையும் இரகசியமான நடத்தைகளையும் இவ்வாறுதானென்று நிச்சயமாய் மதிகக யாரால் முடியும்!" என்று இரண்டு நாழிகை யோசனை செய்துகொண்டு மௌனமாய் நின்றுவிட்டுப் பின்பு கிருஷ்ணையரை யழைத்துக்கொண்டு சத்திரத்துக்கு வெளியில் வந்து அதற்கருகிலுள்ள தென்னஞ்சோலைக்குட் போயினர். அங்கு ஒரு வரும் இல்லாத பக்கத்தில் இருவரு முட்கார்ந்தபின்னர்,

கிருஷ்ணையர்:—(கோவிந்தய்யரை நோக்கி) "ஐயா! தங்கள் மனம் மிக்க சஞ்சலத்தை யடைகிறதென் றெண்ணுகின்றேன். கொஞ்ச காலம், தங்களுடன் எனக்கேற்பட்ட பழக்கத்தினால் தங்களுடைய சுபாவம் இன்னதென்று தெரிந்துகொண்டிருக்கின்ற எனக்குஇப் பொழுது தாங்கள் ஒன்றும் பேசாமல் நிற்கும் நிலையும் தங்களுடை ய மௌனமும் மிக்க வியப்பை உண்டாக்குகின்றன" என்றார்.

கோவிந்தையர்:—(முகத்தினால்வெளியிடப்பட்ட மனக்கவலையு டன் கொஞ்சம புன்னகை கொண்டு,) "ஐயா! தாங்க ளறியாத தெ ன்ன? உண்மை எவ்வாறிருக்குமோ என்கிற சங்கையினால் என் னுள் ளம் பலவாறு சஞ்சலத்தை யடைகின்றது மெய். இப் பெண்மணி

யின் முன் வரலாறொன்றும் நான் அறிந்திலேன். மகா புத்திசாலியானதால் இவ்விஷயத்தில் தாங்கள் மொழிவதுதான் எனக்குப் பிரமாணம். ஒன்றும் நிலைவரமாக மொழிய என் மனம் துணியவில்லை.

"வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்"

என்னும் முதுமொழியின்படி பரோபகாரஞ்செய்யவேண்டுமென்னும் கருத்துடன் மட்டும் பிரவேசிக்கும் நமக்கு எவ்வித அபவாதமும் சம்பவிக்கக் கூடாதல்லவா? அஃதொன்றுதான் என் மனத்தைச் சங்கடத்துக்குள்ளாக்குகின்றது" என்றார். அதைக் கேட்டு,

கிருஷ்ணையர்:—"ஐய! அம்முறை நினைத் தாராய்வது தங்கள் பெருமைக்குப் பொருந்தியதேயன்றி வேறன்று. நான் சென்ற ஐந்து மாதங்களாகப் பழகி அம் மடந்தையினுடைய மனத் தூய்மையை மிக நன்றாக அறிந்திருக்கின்றேன். அவளைப் பெற்றோன் குபேரன் போன்ற சீமான். அவள் பிறந்தவீட்டுச் செல்வமெல்லாம் அவளுடைய இளைய மாமியார் கைவசமிருக்கின்றது. என் அறிவுக்கெட்டியமட்டில் அந்த இளைய மாமியார் கொலைக்கஞ்சாத பழிகாரியென்று நினைக்கிறேன். நடராஜசெட்டியார் குடும்பத்துக்கு ஐந்து ஆறு லக்ஷம் பெறுமான செல்வமுண்டு. இச சிந்தாமணியையும் அகற்றிவிட்டு நடராஜ செட்டியாரையும் ஊருக்குத்திரும்பி வராமல் செய்துவிட்டால் முழுச் செல்வமும் தன்னுடைய மகனுக்கே சித்திக்குமென்னும் தீய நோக்கத்தினால் அக் கொடும்பாவியே தன் மகனைக்கொண்டு இப்பத்திரிகைகளை எழுதும்படி செய்திருக்கிறாளென்று என் உள்ளத்தில் தெளிவாகத்தோன்றுகின்றது. பொருளாசையினால் உலகத்தில் என்னென்ன விநோதங்களோ நடக்கின்றன. மேலும், சொந்த மாமியாரே மருமகளிடத்தில் பக்ஷமாயிருப்பதை நாம் வெகு இடங்களிற் பார்க்கவில்லை. இளைய மாமியார், மூத்தாள் மகனும் அவன் மனைவியும் வாழச் சகிப்பாளா? சூது புரிந்து அது நிறைவேறுமாயின் அதினாலுண்டாகும் பயனைத்தும் அவ

ஞுடைய மகனுக்கே கிடைக்கக்கூடியது. இந்நிலைமையில் அவள் எவ்வித அநீதத்தையும் புரிய விரும்புவாளென்பதில் ஐயமில்லை. திருகுற்றாலத்திலிருக்கும் என்னுடைய தமையனார் சந்திரசேகரய்யா இப் பெண்ணின் பரிதாபமான நிலைமைக்கு இரங்கி ஓர் பத்திரிகையும் கொடுத்து அவளை என்னிடத்திற்கனுப்பினார். அது முதல் அவளிடத்தில் நான் அறிந்து வியக்கும் நிர்மலமான சுவபாவத்தை நான் என்னென்று சொல்வேன்! அவள் வைசிய ஜாதியிற் பிறந்த பெண்ணாயினும், அவளுக்கொப்பாக நம் மறையவர் குலத்திலும் எந்த வனிதையையும் சொல்ல என்மன மிணங்காது. விழிக்கும் கணம்முதல் கண்மூடி யுறங்கும் பொழுதுவரை அவள் புரிவதனைத்துந் தவமாகவே இருக்கின்றது. பரம சாத்வியாயிருக்கிற இக்குயிலுக்கு இவ்விதத் துயரம் வரலாமா வென்று சாதாரணமான அறிவுடைய என் மனைவி புலம்பித் தவிக்கின்றாள். இவ் வுலகவாழ்வே அம்முறையா யமைந்திருக்கின்றது.

நல்லவர் மெலிவர்: நல்கும் நலமுளார் மிடிமைகொள்வர்:
பல்லறம் புரிவார் நொந்து படுவர்: இப் புவியிற்றுதும்
அல்லலும் நிறையுமாந்தர் ஆக்கமும் மகவும்வாழ்வும்
புல்லியேபொலிவசேல்இப் புவியுடை நடுநோக்கென்னே?

இப்பத்திரிகைகளினால் அம்மாது சிரோமணியிடத்தில் தாங்கள் கொஞ்சங்கூட சந்தேகம் பாராட்டக் கூடாது. அச செட்டியாரை மிக்க புத்திசாலியென்று சொல்லுகிறீர்கள். அதைக்கேட்க எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. ஞாதியர் எவ்வித துர்க்குணமுடையவராயிருந்தாலும் அவர்களுக்குத் தம்மா லியன்றமட்டும் உதவிசெய்வது நல்லோர்களுடைய இயல்புதான். இருந்தாலும அவர்கள் ஞாதியர் என்பதையும் மேலுக்குமட்டும் பலவிதமாய் அன்பு பாராட்டி நடப்பினும் தங்களுடைய இலாபத்தையே மேலாகக் கருதித் தங்களுக்கு உதவிசெய்கிற ஞாதிகளுக்குச் சமயத்தில் தீங்கை விளைவிப்பார்கள் என்பது அநுபவசித்தமான விஷயமல்லவா? இப் பத்திரிகைகளைப் பார்த்தவுடன் அவைகளை எழுதினவர்கள் ஞாதியர் என்பதைக் கருதி அவைகளி லடங்கிய வரலாறுகளின

உண்மை என்னவென்று விசாரிக்காமலே அவைகளை நம்பி அலங்கோலப் படுகின்றவரா புத்திசாலி? சீ! சீ! என்ன மடமை! ஒரு நாழிகை பழகினும் இப்பெண்மணியின் உத்தம குணங்கள் எவருக்கும் எளிதிற் புலப்படுமே. அவளை மணம்புரிந்து அவளுடன் பலநாள் வாழ்ந்திருந்தும் அவளுடைய புனிதமான மனோபாவத்தையும் சீலத்தையும் நன்கு மதிக்காமல் தன் கௌரவத்தையும் மனத்தையும் பாழாக்கிக்கொண்டு தன்னுயிர்க்கே கேடு விளைத்துக்கொண்டிருக்கின்ற இந்த மனுஷன் புத்திசாலி? அவருடைய கருமபலனை அவரநுபவிக்கின்றார். இந்த அம்மாளுடைய பூர்வவினையும் இவளை விடவில்லைபோலும்" என்று சொல்லி மனவருத்தத்தை வெளியிட்டார். இதைக்கேட்டு கோவிந்தய்யர் அனலின் முன்னர் வெண்ணெய்போல் உருகின மனமுடையவராய், "ஐயா! ஏதோ நான் தவறுதலாக மொழிந்தேன். "ஒருகால் தருமமுறையிலிருந்து வழுவி நடந்துவிடுவோமோ என்கிற பயத்தினால் என் மனம் சஞ்சலத்தை யடைந்ததே தவிர அந்தப் பதிவிரதையின் உயர்ந்த பண்பை இகழ்ந்து பேச நான் துணிந்தவனல்லேன். மனப்பிழை யில்லாவிடினும் நான் மொழிந்த வசனங்களில் குற்ற மமைந்திருப்பின் அதைப் பரமேசுவரன் கருணை கூர்ந்து மன்னிப்பாராக.

(தொடரும்)

பி. எஸ். சுப்பிரமணியய்யர்.

முத்திரா ராக்ஷஸம்.

ப்ரவேசம். சிஷ்யன்

(3-வது தொகுதி 390-ம் பக்கத்தொடர்ச்சி).

சிஷ்யன்:—குருச்ரேஷ்ட! காலபாசன், தண்டபாசன் என்ற இருவரும் சந்த்ரகுப்த மஹாராஜனுடைய கட்டளையை நிறைவேற்றிவிடுவதாகத் தேவரீரிடம் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

சாணக்யன்:—வத்ஸ! சரி! இரத்ன வியாபாரி சந்தனதாஸனை இப்பொழுது பார்க்கவிரும்புகின்றேன்.

சிஷ்யன்:—அப்படியே! (போகிறான்)

ப்ரவேசம், சிஷ்யன். சந்தனதாஸன்.

சிஷ்யன்:—செட்டியாரே! இப்படி, வாரும்!

சந்தனதாஸன்:—(தனக்குள்) சாணக்யனோ கருணையேயுற்றவன் யாதொரு குற்றமுமற்றவனாயினும், சாணக்யன் அழைத்த மாத்திரத்திலே சந்தேகந்தான். குற்றமுள்ள என் விஷயத்தில் கேட்பதேன்! ஆகையால், அயோக்யன் சாணக்யன் எந்நோத்திலாவது, நமது வீட்டைப் பரிசோதிக்க வருவான் என்றும், ஆகையால் நமது எஜமானன் ராக்ஷஸனுடைய குடும்ப ஜனங்களைக் காப்பாற்றும் விஷயத்தில அதிஜாக்ரதையாயிருக்கவேண்டும் என்றும், எனது க்ருஹத்தில் வஸித்துக் கொண்டிருக்கும் தனஸேனன் முதலானவர்களை எச்சரித்திருக்கின்றேன். என் விஷயத்தில் வருவன வரட்டும்.

சிஷ்யன்:—செட்டியாரே! இப்படி வாரும்!

சந்தனதாஸன்:—இதோ வருகின்றேன் (இருவரும் செல்லுகிறார்கள்).

சிஷ்யன்:—(ஸமீபத்தில் சென்று) குருச்ரேஷ்ட! இதோ செட்டியார் சந்தனதாஸர் வந்திருக்கின்றார்.

சந்தனதாஸன்:—ஆர்ய! ஜய, ஜய!

ணக்யன்:—(எதிட்டுப்பார்த்து) செட்டியாரவர்களே! வர வேணும். இவ்வாஸனத்தின் கண் உட்காருங்கள்.

சந்தனதாஸன்:—(நமஸ்கரித்து) தகுதிமிகுதியாய் உபசாரஞ் செய்வது, அவமதிப்பைக்காட்டிலும், மனதுக்கு அதிக வருத்தத்தை விளைவிக்கின்றது. ஆகையால், இவ்விடத்திலேயே, என நிலைமைக்குத தக்கவாறு தரையில் உட்காருகின்றேன்.

சாணக்யன்:—ஆஹாஹா! செட்டியாரவாள்! அப்படிச்சொல்லலாமா? தங்களைப் போன்றவர்களுக்கு என் போன்றவாகள் இவ்வளவு உபசாரம் செய்யவேண்டியது தகுதிதானே! ஆகையால் (இந்த) ஆஸனத்தின் மீதே அமரவேண்டும்.

சந்தனதாஸன்:—(தனக்குள்) இந்த அயோக்யன், ஏதோ ஞாஎண்ணங்கொண்டிருக்கின்றான். (வெளிப்படையாய்) தேவரீர் உத்தரவுப்ரகாரம்! (உட்காருகின்றான்).

சாணக்யன்:—ஐயா செட்டியார் சந்தனதாஸரவர்களே! தாங்கள் ந்யாயப்படி நடத்திவரும் வியாபாரங்களில் சரியான வரும்படிகள்—மேனமேலும் வந்துகொண்டிருக்கின்றனவா?

சந்தனதாஸன்:—(தனக்குள்) இவன் உபசாரம் பண்ணப்பண்ண நமக்குச்சந்தேகம் அதிகரிக்கின்றது. (வெளிப்படையாய்) தடையென்ன? தேவரீர் அனுக்ரகத்தால. எனது வியாபாரங்களெல்லாம் சரியாகவே நடந்துவருகின்றன.

சாணக்யன்:—சரி! சந்த்ரகுப்தன் பண்ணும் அக்ரமங்களெல்லாம், முந்திய அரசர்களின் நற்குணங்களை ப்ரஜைகள் இப்பொழுது நினைக்கும்படி செய்கின்றனவல்லவா?

சந்தனதாஸன்:—(காதுகளைப் பொத்திக் கொண்டு, அடடா! அப்படிச் சொல்லலாகாது! சரதகால இரவில் உதிக்கும் பூரண சந்திரனைக் கண்டு மகிழ்வது போல, சந்திரகுப்த மகாராஜாவின் உன்னதபதவியைககண்டு ஜனங்களெல்லோரும் ஸந்தோஷித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

(இன்னும் வரும்)

R. வேதநாராயணசர்மா B. A., B. L.

உ

சிவமயம்.

மணி மந்திர ஔடதம்.*

உடற்குறு நோயையும், உயிர்க்குறு நோயையும் நீக்கி இன்புறும் முறையினை வருத்தும், விரித்தும் விளக்குவதே இவ்வுபந்நியாசத்தின் கருத்தாம்.

திருச்சிற்றம்பலம்.

பேராயி ரம்பரவி வானோ ரேத்தும்
 பெம்மானைப் பிரிவிலா வடியார்க்கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
 மந்திரமுந் தந்திரமு மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னைத்
 திரிபுரங்க ளெரியெழத்தின் சிலைகைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
 போற்றாதே யாற்றநாள் போக்கினேனே.

என்பது திருநாவுக்கரசு சுவாமிக ளருளிச்செய்த தமிழ்வேத மந்திரம். இம்மந்திரத்தில், "மந்திரமுந் தந்திரமு மருந்துமாகி" என்பது இந்திரியச் செயல் மனச் செயல்களால் வாராத சிவப்பேறும் அச்செயல்களாற் றீர்க்கமுடியாத பிறவிநோயைத் தீர்த்தலாகிய பாசவிடுதியுந் தருமென்பது தோன்ற இடையில சிவகநோக்காய் நின்றது.

இன்னுந் தன் முயற்சியால் வாராத சிவப்பேறுந் தன் முயற்சியால் தீராத பிறவிநோயும் வருதற்குந் தீர்தற்கும் மந்திரமுந் தந்திரமும் மருந்துமாகி என்றலுமொன்று.

இன்னும் வாராதசெல்வம் வருமென்றதனுல் எளிதில்வருஞ் செல்வமாகிய இம்மை மறுமைச் செல்வமும் வருமென்றுந் தீராநோய் தீருமென்றதனால், எளிதிற் றீருநோயாகிய உடற்குறுநோயுந் தீருமென்றும் இலேசாற் கொள்க.

அன்றியும் நோய்தீர்வதற்கு உபாயமாகக் கூறும் உலக வாய்ப்பாடு மணிமந்திர ஔடதங்கள் இம்மந்திரத்தில் உபாயமாகக் கூறுவன, மந்திரந் தந்திரம் மருந்து என்னும் உலகவாய்ப்பாட்டையும்,

---

* இது சென்னையில் கூடிய சைவசித்தாந்த மகாஜனசமாஜத்தில் குண்டூர் டிஸ்டிரிக்டு முன்சிபு ஸ்ரீமான். J. M. நல்லசாமிபிள்ளையவர்கள் அக்கிராசனத்தில் உபந்நியாசிக்கப் பெற்றது.

இத்தமிழ்வேத மந்திரத்தையும் ஒப்பிட்டு நோக்குங்கால் மந்திரம் ஔடதம் என்னும் உலக வாய்ப்பாட்டுக்கு சுருதியில் மந்திரம் மருந்து எனவும் மணியென்னும் உலகவாய்ப்பாட்டுக்கு சுருதியில் தந்திரமெனவும் அருள் செய்திருப்பது கவனிக்கத்தக்கது.

ஈண்டு மந்திரம் தந்திரம் மருந்து என்பன முறையே பஞ்சாக்கரம் உருத்திராக்கம் விபூதியென்னும் பொருள் மேலனவாம்.

அற்றேல் இவை உடற்குறுநோயையும், உயிர்க்குறுநோயையும் தீர்ப்பது எவ்வாறெனை ஆசங்கை நிகழுமனறே! அவ்வாசங்கைபற்றிய இயைபானே அவற்றால் அவ்விருநோய்களுந் தீரும் முறையினை யெமது சிற்றறிவுக் கெட்டியவாறு விளக்குதும.

உடற்குறுநோய்.

காணப்படும் இவ்வுலகத்தில் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமென்னும் ஐந்துபூதங்களுள் ஆகாயமும் பிருதிவியும் நீங்க ஏனை மூன்று பூதங்களும் தத்தம் அளவில் நில்லாது மிகினுங் குறையினும் உயிர்களுக்குத் துன்பத்தைத் தரும். அவ்வாறே உடம்பிலும் அம்மூன்று பூதங்களின் நிலை பிறட்சியே நோயாகும். இதுபற்றியே "மிகினுங் குறையினும் நோய்செய்யு நூலோர், வளிமுதலா வெண்ணிய மூன்று" எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரருளிச்செய்தார்.

உடம்பிலுள்ள மூன்று பூதங்களுள் வாயுவை வாதமென்றும், அக்கினியைப் பித்தமென்றும், அப்புவை சிலேட்டுமமென்றும், ஆயுள்வேதமுடையார் கூறுவர். ஏனைய பிருதிவி ஆகாயம் என்னும் இரண்டு பூதங்களாலும் உடம்பினும், உலகினும், துன்பம் உண்டாமாறு இல்லை. ஆதலின் ஐந்துக்கு இரண்டு பழுதில்லை. எனப் பழமொழி வழங்கிவருவதாயிற்று.

நோயின்காரணமுந் தீருமுறைமையும் உடம்பினுள் இம்மூன்று பூதங்கள் நிலைபிறள்தற்கு இரண்டு காரணங்களுள்ளன. அவை வருமாறு:—

1. அபத்தியம். 2. கன்மம்.

அவற்றுள் அபத்தியமாவது ஆகாரம் நித்திரை முதலியன. மிகுதலுங் குறைதலு முண்ணத் தகாதவற்றை யுண்ணுதலுஞ் செயத் தகாதவற்றைச் செய்தலும், வசிக்கத் தகாத இடத்தில் வசித்தலும், இவை போல்வன பிறவுமாம். இவ்வபத்தியம் தன்னால் வருவதாதலின் அறிவுடையோர் அதுவாராமற் காத்துக்கொள்ளவேண்டும். இதுபற்றியே நம் மூதாட்டியாராகிய ஔவைப் பிராட்டியார் "நோய்க்கிடங் கொடேல்" என்றருளிச்செய்தார். இவ்வாறு அபத்தியத்தால் உண்டாகு நோயினைத் தவிர்ப்பதற்கு ஔடதம் உபகாரமாம்: அவ் ஔடதம் அபத்தியத்தினால் உண்டாகு நோயைமட்டுந் தீர்ப்பதன்றிக் கன்மத்தினால் உண்டாகு நோயைத் தீர்க்க மாட்டாது.

கன்மமாவது அபத்தியம் ஒன்றுஞ் செய்யாதிருக்கவும் நோய் உண்டா தல். இக்கன்மம் துற்பலகன்மம், பிரபல கன்மமென இருவகைப்படும். அவ ற்றுள் துற்பலகன்மம் பிராயச் சித்தங்களாற் றீரும். இப்பிராயச் சித்தமே தந்திர மென்பதின் பரியாயப் பேராகிய மணியெனப்படும். பிரபலகன்மம் நோயுடையான் தன்னுஞ் சிவபெருமானை ஆராதித்தலாற் றீரும். தன்னு லாராதிப்பதாகிய இதுவே மந்திரமெனப்படும். மந்திரமென்னும் பதத தின் அருத்தம் தன்னைக் காத்தல்.

இதனானே வயித்தியர்கள் நோயாளியைக் கண்டபொழுது நோயின் காரணத்தை நன்கறிந்து காரணத்திற்கேற்பச் செய்யவும் செய்விக்கவும் வேண்டும். ஈமாறிச்செய்யிற் பயன்படாது.

இவ்வாறன்றி நோயுடையானை வயித்தியன் பரிசித்தல். அதாவது வாயு க்கலையும்படியாகத் தட்டுதல், அமிழ்த்துதல் முதலானவையும் வெட்டுதல் கீறுதல் முதலானவையும் செய்தல் மணியெனப்படும் தந்திரமெனவும், வயி, த்தியன் தன் இஷ்ட தேவதையை வியாதியாளன் பொருட்டு பிரார்த்தித தல் மந்திரமெனவும், கொடுக்கும் மருந்து ஔடதமெனவும் ஆக மூன்றும் வைத்தியனிடத்து வைத்துக் கூறுதலுமொன்று.

இன்னும் மணிசிவபெருமான் திருநேத்திரத்திலுண்டாகிய உருத்தி ராக்கமென்றும், மந்திரம் ஸ்ரீ பஞ்சாக்கரமென்றும், ஔடதம் விபூதியென் றும் அறிவிற் பெரியோர் கூறுவர். தந்திரமென்பது கிரியை. நேத்திரத்து இரக்கச்செயலாலுண்டானதால் தந்திர மெனப்பட்டது. இம்மூன்றும் உயிர்க்குறுநோயை யொழிக்க வல்லனவென்பது முன்னர்க்காட்டப்படும்.

ஈண்டு உடற்குறு நோயையுந் தீர்க்கவல்லன வென்பதைப் பிரமாண வாயிலாகக் காட்டுதும்.

மதுரையில் கூன்பாண்டியன் சைவசமயியாயிருந்தும் தன் சமயத்தைத் துறந்து அமண் சமயத்தைப்பற்றிய அபத்தியத்தால் அவனுக்குண்டாஞ் சுரநோயை திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருமடைப்பள்ளி விபூ தியால் தீர்த்தமையானும், அப்பர் சுவாமிகளுக்குண்டாம் வயிற்றுநோயை விபூதியால் திலகவதியம்மையார் தீர்த்தமையானும் விபூதி அபத்தியத்தா லுண்டாம் நோயைத் தீர்க்கும் ஔடதமாயிற்று.

இனி ஒரு அசுரன் யுத்தத்தால் தேவர்களைப் பலவாறு துன்புறுத்த தேவர்கள் பிரமாவை வழிபட்டு அசுரனை வெல்லுதற் குபாயங்கேட்க விபூதி உருத்திராக்ஷதாரணத்தோடு யுத்தஞ்செய்யின் வெற்றி பெறலாமெ ன்று பிரமதேவன் கூற அவ்வாறே சிலர் இரண்டு சிவசின்னங்களையுஞ் சிலர் விபூதி யொன்றையும் அணிந்துகொண்டு யுத்தஞ்செய்ய, வெயர்வை

யால், விபூதி மறைந்துவிட அங்ஙனம் மறைந்து உருத்திராக்கமில்லாத யாவரும் மடியவும், உருத்திராக்கமுடையார் மடியாதிருக்கவுங்கண்ட தேவர்கள் மீண்டும் பிரமாவை வழிபட்டுக் கேட்க யாவரும் உருத்திராக்கம் அணிகதுகொண்டு செல்லுகவென, அவ்வாறே சென்று வெற்றிபெற்றார்கள். இச்சரித்திரங் காசிகாண்டத்திலுள்ளது. தேவர்கட்கு அசுரராலுண்டாந் துன்பஞ்சரீர சம்பந்தமாயும் துற்பல கன்மகாரணமாயு முள்ளதாம். இதனால் உருத்திராக்கம் துற்பல கன்மத்தாலுண்டாந் துன்பமாகிய நோயைத் தீர்க்குந் தந்திர மெனப்படு மணியாயிற்று.

இனி திருநாவுக்கரசு சுவாமிகள் சைவசமயத்தைத் துறந்து அமண்சமயத்திற் பிரவேசித்துக் கூன்பாண்டியன்போலன்றித் தாமே ஆசிரியராயிருந்து பின்னர் பிரவேசித்த அபத்தியததிற்காக உண்டாகு சூடர்நோயை திலகவதியம்மையாரளித்த விபூதியால் தீர்த்து சைவசமயப் பிரவேசமானமையைக் கண்ட அமணர்கள் ஆசிரியராயிருந்த பிரபல கன்மத்தின் பயனாகக் கல்லைக் கட்டிக் கடலிற் செலுத்த அதனாலுண்டாந் துன்பமாகிய உடற்குறு நோயை,

> சொற்றுணை வேதியன் சோதி வானவன்
> பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
> கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினு
> நற்றுணை யாவது நமச்சி வாயவே.

என்னுந் திருப்பதிகம் பாடிப் பஞ்சாக்கர மந்திரத்தைச் செபிக்கவே கல் தெப்பமாய் மிதக்கக் கரையேறித் தீர்ந்தனர். இதனால் பஞ்சாக்கரம் பிரபல கன்மத்தாலுண்டாம் துன்பமாகிய நோயைத் தீர்க்கு மந்திரமாயிற்று.

இவற்றுள் விபூதி பிறராற் கொடுத்துப்பெற்ற ஔடதமானமையும் உருத்திராக்கம பிறராற் கற்பிக்கப்பட்ட தந்திரமானமையும், பஞ்சாக்கரம் தன்னாற் செபித்த மந்திரமானமையும் முறையே வைத்தியனால் அபத்தியத்தினாலுண்டாம் நோயும் வேறு உரிமையுடைய பிறரால் துற்பல கன்மத்தாலுண்டா நோயுந் தன்னால் பிரபல கன்மத்தாலுண்டா நோயுந் தீருமென்று மேற்கூறியவற்றை வலியுறுத்தியவாறு கவனிக்கத்தக்கது.

இன்னும் பிரபல வியாதியால் சீதம் பிறந்தபோது விபூதியை உத்தூளனமா யணிவதாலும் துணியிற் கட்டித் தேகத்தில் ஒத்திடுதலாலு நோய் நீங்கக் காண்கின்றோம். அன்றியும் இவ்விபூதியை விலக்கென்று கொண்ட முகம்மதியருந் தங்கள் பள்ளியில் விபூதி வைத்திருக்கின்றார்கள். கிறிஸ்துவரும் ஒருதினத்தில் விபூதித் திருவிழாக் கொண்டாடுகின்றார்கள். ஆயுனமாயின் பசுவின் சாணமே விபூதியெனவும், சாம்பல் விபூதியன்றெனவு மேற்கூறியவைகள் சாம்பலே யெனவுங்கொண்டு விபூதியை இகழ்கின

தனர். வீபூதி வைதிகம்' லௌகிகம் என இருவகைப்படும் என்றும், அவற்றுள்ளும் லௌகிகம் சைவம் அசைவமென இருவகைப்படு மென்றும், அசைவம் பசுவின் சாணத்தாலுள்ளதன்றென்றும் அதுவே சாம்பலென்றும், மூழவகுஞ் சாத்திர உண்மையை அவரறிந்திலர். இன்னும் இதன் பெருமையை விரிக்கிற் பெருகும்.

இவ்வாறே உருத்திராக்கத்திலும் நோய்களை நீக்கும் சக்திக ளுண்டென்று அன்னியநாட்டாருங் கண்டுபிடித்து நோயாளிகளுக்கு இழைத்துக் கொடுக்கின்றார்கள். பேயோட்டுதல் முதலானவற்றிற்கு அன்னிய மதத்தர் பஞ்சாக்கரத்தையே மாறிச் செபிக்கின்றார்கள். ஆகவே இவைகள் பெம்மதத்தினர்க்கும்நோயைத் தீர்க்கும் தகையுடையவென் றறியத்தக்கன.

உயிர்க்குறுநோயும் அதன் காரணமும்.

இனி உயிர்க்கு நோயாவது பிறப்பு இறப்பென இருவகைப்படும். அவை வருதற்குக் காரணம் ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்தமென மூவகைப்படும். அவற்றுள் ஆகாமியம் அபத்தியமெனவுஞ், சஞ்சிதம் துற்பலகன்மமெனவுங் கருதவேண்டும்.

இவற்றுள் ஆகாமியமாவது:—மனம் வாக்குக் காயங்களால் யானெனதென்னும் அகங்காரத்தோடு கூடிச் செய்யுஞ் செயல். சஞ்சிதமாவது:—செயல்செய்தவனுடைய புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கிடந்து, பக்குவமாதல். பிராரத்தமாவது:—அங்ஙனங்கிடந்து பக்குவப்பட்டு இன்ப துன்பமாக அனுபவிக்கவருதல்.

இவ்வாகாமிய சஞ்சித பிராரத்தங்களைத் திருட்டாந்த முகத்தாற் கூறுமிடத்து ஒருவன் நிலத்தில் வித்தைப் பெய்ததுபோ லாகாமியம். பெய்த வித்து பெய்தவன் புத்தியில் தன்னுடையதென்னும் பற்றுக்கோடாக பயன்றரும்வரை பூமியிற் கிடந்து பக்குவமாதல்போல் சஞ்சிதம். பயன்போற் பிராரத்தம்.

இம்மூவகை வினைகளுள் "பிற்செயா ததுபவிப்பதின்றும்" என்றபடி பிராரத்தம் அனுபவிப்பதற்குத் துணையான செயலை பிராரத்தமெனக் கருதாது தனனும், பிறராலும் நிகழ்ந்ததெனக் கருதுவதே ஆகாமியமாய் அவ்வாகாமியம் சஞ்சித பிராரத்தங்களாய் இவ்வாறே எவ்வுயிரும் பிறந்திறந்துழலும்.

அவ்வாறுயின் ஆகாமியத்தால் பிராரத்தமும், பிராரத்தால் ஆகாமியமும், வித்தும் மரமும் போலாதலால் முற் பிற்பாடுகூற இயலாது,

வரம்பின்றி போடுதலென்னுங் குற்ற மாகாதோ வெனின்? உயிர் அனாதி யில் ஆணவ கேவலத்துட்கிடந்து வருந்த அவ்வருத்தத்திற் கிரங்கி இறைவன் தநுகரணங்களைக்கொடுத்து வினையையுங் காட்டினு னுதலின் வரம்பின்றி யோடுதல் யாண்டையதென்க. இன்னு மிதன்கட்படும்வினுவிடைக ளெல்லாம் கன்மமென்னும் வியாசத்தில் விரித்துரைத்தாம். ஆண்டுக் காண்க.

இம்மூவகை வினைகளும் பிராரத்தவினைக் கீடாக நிகழுஞ் செயல்களைத் தனதாக வென்னுதலால் ஆகாமியமாதலின் அது அபத்தியமென்றும், பயன்படாமையின் சஞ்சிதம் துற்பலகன்மமென்றும், அநுபவமானமையின் பிராரத்தம் பிரபல கன்மமென்றுங் கூறப்பட்டன.

உயிர்க்குறுநோய் தீருமுறை.

மேற் கூறியவாறு மூவகை வினைகளாலும், பிறந் திறந்துழலு முயிர் தெய்வ கிருபையால் நல்லறிவு சிறிது சேரப்பெறுங்கால் பிறவி நோயைத் தவிர்க்கும் ஔடதம் தர வல்ல நல்லாசிரியனைத் தேடும். தேடவே வேண்டுவார் வேண்டுவதே யீவான் என்ற சுருதியின்படி இறைவன் திருமேனி கொண்டு குருவாய் எழுந்தருளுவான். எழுந்தருளிச் சீடனை யருட்கண்ணுற்பார்த்து சட்சுதீட்சை செய்து அத்துவ சோதனையுஞ் செய்து முத்தி பஞ்சாக்கரத்தை உபதேசித்து சிவாநுபவம் வரப்பண்ணுவன்.

தீட்சை உபதேசம் அநுபவம் என்னும் இம்மூன்றனுள் தீட்சை சஞ்சிதவினைகளைக் கெடுத்தலின் துற்பலகன்மத்தை நீக்கும் தந்திரமென்னும் மணியாயிற்று.

உபதேசம் அநுபவிக்கப்படும் பிராரத்தத்தை ஒழித்தலின் பிரபல கன்மத்தை நீக்கு மந்திர மாயிற்று.

அநுபவம் மேல்வினை யேறுதற்குரிய யானெனது மகங்காரத்தை நீக்குதலின் அபத்தியத்தை நீக்கும் ஔடதமாயிற்று.

(இன்னும் வரும்.)

பொ. முத்தையபிள்ளை,
சைவப்பிரசாரகர்.
தூத்துக்குடி.

சமாசாரக் கொத்து.

இளங்காடு நற்றமிழ்ச்சங்கம்.

5-வது வருஷோத்ஸவம்

தஞ்சாவூர் தாலூகா, இளங்காடு என்னும் பெரியகிராமத்தில் அவ்வூரார்து தமிழபிமானத்திற்கறிகுறியாக நடைபெற்றுவரும நற்றமிழ்ச்சங்கத்தினது 5-வது வருஷோத்ஸவம் நிகழும் சித்திரையீ 1,2. தேதிகளில் மிகசசிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

முதல்நாள் (சித்திரையீ 1 வ) தஞ்சை டிப்டிக்கலெக்டராயிருந்து இப்பொழுது கார்ப்போரேஷன் ரிவன்யூ ஆபீசராயிருக்கும் ஸ்ரீமான் P. விஜயராகவாச்சாரியார் அவர்கள் M. A. அக்கிராசனம் வகித்தனர், அன்று தஞ்சை டெபுடிக் கலெக்டர் முனிசிபல் செகரட்டரி முதலியவர்களும், பிறவூர்களிலிருந்து எஞ்சனியர்கள் உயர்தர உபாத்தியாயர்கள் முதலியவர்களும வந்து நிறைந்தனர். கூட்டம 1500க்குக் குறையாது.

அன்று முதலில் தேவாரமும் அரசவாழ்த்தும் ஓதப்பெற்றபிறகு காரியதிருவாசர் ஸ்ரீ மு. கோவிந்தசாமிச்சேதுராயரவர்களால் வந்தனோபசாரப்பத்திரிகையும, காரியதரிசியாகிய ஸ்ரீ சொக்கலிங்கசேதுராயாவாகளால் விருத்தாந்த அறிக்கைப்பத்திரமும் வாசிக்கப்பெற்றன. பின்பு ஸ்ரீ T. V. அரங்கசாமியய்யர் B. A. L. T. அவர்கள் "தேசாபிமானமும் நமது கடைமைகளும்" என்பதைக் குறித்து ஓர்பிரசங்கம செய்தனர். அதனையடுத்து சோழவந்தான மஹாவித்வான் ஸ்ரீமான் அரசஞ்சண்முகனார் அவர்கள் "தேவாரநூலை" என்பதை விளக்கி ஒருநீண்ட அரிய பிரசங்கஞ்செய்தார்கள. அதன் பின்னர் ஸ்ரீ வே. முத்துஸ்வாமியையர் B. A. B. LT. அவர்கள் புதுவருஷ வருகையைப்பற்றிய அகவற்பாவை அச்சபையிற் படித்தபிறகு சுவாமி வேதாசலம்அவாகள் கல்வியினதுசிறப்பு, இந்தியர்களது தற்காலநிலைமை இவற்றைக்குறித்துச் சற்றுநேரம பேசினார்கள், இதனோடு அன்றையகூட்டம் கலைந்தது.

இரண்டாம்நாள் ஸ்ரீ அனந்தஜோசியர் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ், திருக்காட்டுப்பள்ளி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ சுப்பிரமணியஐயர் அவர்கள் கல்வி என்பதைப்பற்றியும்,உள்ளூர்கந்தசாமிச்சேதுராயரவர்கள் கேள்வி என்பதைக்குறித்தும், ஸ்ரீமத் சுவாமிவேதாசலம் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீ சிங்காரவேலங்கராயர் அவர்கள் "இல்லறம்" என்பதைப்பற்றியும் அரயகாதபுரம் வே. முத்துஸாமிஐயர் அவர்கள் "தொல்காப்பியம் பொருளதிகாரம்என்பதைப்பற்றியும், சொக்கலிங்கச்சேதிராயர் அவர்கள் 'பொருளீட்டல்' என்பதைப்பற்றியும் திருச்சி. S. P. G காலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. மு. வெங்கடசாமிநாட்டார் அவர்கள் 'வேதாந்தசித்தாந்தம்' என்பதைப்பற்றியும், உள்ளூர், முருகையகவிராயர்அவர்கள் 'முத்திநெறி' என்பதைப்பற்றியும் சுருக்கமாகப் பிரசங்கம் புரிந்தார்கள். பின்னர் அக்கிராசனர் எழுந்து திருஞானசம்பந்தசுவாமிகள் சரித்திர

த்திலுள்ள பலஅரிய நுணுக்கங்களை விரிவாய் எடுத்து விளக்கி சுமார்3மணி நேரம் உபந்யாஸம் செய்தனர். அதன் பின்னர் ஸ்ரீ. வே. முத்துஸாமிஐயர் அவர்கள் முதலிய சிலரால் அக்கிராசனரையும் அன்றாது வேண்டுகோளால் ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகளையும் பற்றித் தோத்திரப்பாக்கள் படிக்கப்பெற்றன.

[தமிழ்மொழி தளர்ச்சியுற்றிருக்கும் இக்காலத்தில் மிக்க பொருட் செலவு செய்து இவ்வளவு சிறப்பாக தமிழ்ச்சங்கம் நடத்திவரும் இளங்காட்டாரது தமிழபிமானம் மிகவும் பாராட்டற்பாலது. இனி இச்சங்கத்தையொட்டி ஓர் கலாசாலையும் சங்கத்திற்கென்றே ஓர் கட்டிடமும் கூடியசீக்கிரத்தில் அமைக்கிறதற்கான முயற்சிகளும் நடக்கின்றன எனக்கேட்டு மகிழ்கின்றோம். இம்முயற்சி இனிது முடிய திருவருளைச் சிந்திக்கின்றோம்.]

2. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 11-வது வருஷ ப்ரதிஷ்டோத்ஸவம் மேஸ் 24, 25, 26 உகளில் நடைபெறும். **மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் கொண்டாட்டம் மேஸ் 26, 27உகளில் நடைபெறும்.**

தர்பாங்கா மஹாராஜா அவர்கள் ஹிந்து சர்வகலா சங்கத்திற்கு 2லட்சம் ரூபாய் வகையில் நன்கொடை அளித்திருக்கிறாரென்றும் இன்றும் தன்னால் கூடியமட்டும் யாதாவது நன்கொடைகள் அளிக்கக்கூடுமென்றும் தெரியவருகிறது.

இந்தியாவைச் சார்ந்த டார்ஜிலிங்கில் முனிசிபாலிட்டி கமிஷனராக ஓர் பெண்பாலிருக்கின்றனர். அவர் பண்டித லீலாவதி சாஸ்திரியின் குமாரத்தியும், ஹேமலால சர்க்காரின் மனைவியுமாவர். அவர் உத்தியோகத்தில் அமர்ந்தது முதல் அந்த முனிசிபாலிட்டியின் திருத்தமும் விருத்தியும் சாஸ்தியாம்.

நமது மாட்சிமைதங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தி பிறந்தநாள் கொண்டாட்டம் வருகிற ஜூன்மீ 3உ திங்கட்கிழமையன்று கொண்டாடப்படும்.

சிலோன் தீவில் வாழும் தமிழர்கள் 10, 59, 354 எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். போன வருஷத்துக்குள் தமிழர் ஜனத்தொகை நூற்றுக்கு பதினொன்றாக அதிகமாயிற்று. சிலோனில் மொத்த ஜனத்தொகை 41, 05, 535. இதில் பௌத்தர்கள் 24, 79, 110; ஹிந்துக்கள் 9, 32, 696 மகமதியர் 283, 582, கிறிஸ்தவர்கள் 4, 08, 984, மற்றவர் மற்ற மதத்தினர்.

ஆசுகவி:—மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்களி லொருவராகிய சோதுகுடி வித்துவான் ஸ்ரீமத். எம். கே எம். அப்துலகாதிறு ராவுத்தரவர்கள் மாட்சிதங்கிய சேதுபதி மஹாராஜா அவர்களைப் பார்த்தபோது கனம் மஹாராஜா அவர்கள் "ஐயா தாங்கள் சோதுகுடி வித்துவான் ஒரு வெண்பாக் கூறுக" என உடனே பின்வரும் கவியைக் கூறினார்களாம். மஹாராஜா அவர்களும் உடனிருந்தவர்களும் மகிழ்ந்தார்களாம்.

சின்மயரா சேஸ்வரியின் செய்யதிருத் தாள்போற்றும்
மன்னவன்ரா சேசரப் மானமுற்றேன்—நன்மலர்வாழ்
மாதுகுடி சொல்சேது மாமரபின வாழ்வேத்தும்
சோது குடிவித் துவான.

பத்திராதிபர்.